**தமிழ்நாடு கருவூல கணக்குத் துறை,**

**கழிவு ஊர்திகள் ஏலம் எடுப்பதற்கான நிபந்தனைகள்**

கழிவு செய்யப்பட்ட அரசுத்துறை ஊர்திகளை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோருவது மூலமாக விற்பனை செய்வதற்கான விளக்கங்களும், நிபந்தனைகளும் பின்வருமாறு:-

ஆணையரகம், கருவூல கணக்குத் துறை, மூன்றாவது தளம், பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை, 571, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35 மூலம் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ள மற்றும் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ள ஊர்திகளுக்கான நிபந்தனைகள்:

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி படிவம் கொடுக்கப்படும் ஆரம்ப தேதி | 27.05.2022 காலை10.30 மணி முதல் |
| 2. | ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் | 28.06.2022 மாலை 04.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் |
| 3. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் | 29.06.2022 காலை 10.15 மணி வரை |
| 4. | இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறந்து அறிவிப்பு செய்யும் தேதி மற்றும் நேரம் | 29.06.2022 அன்று காலை 10.30 மணி (Light Motor Vehicles/ இலகுரக நான்கு சக்கர ஊர்திகள்) |
| 5. | விற்பனை உறுதி (வாய்மொழி) செய்யப் பட்ட ஊர்திகளுக்கு 25% ஏலத்தொகை செலுத்த வேண்டிய நாட்கள் மற்றும் நேரம் | 29.06.2022 மற்றும் 30.06.2022 (ஆகிய பணி நாட்களில்) மாலை 4.30 வரை |
| 6. | 75% ஏலபாக்கி தொகையும் சரக்கு மற்றும் சேவை வரி தொகையும் அபராதமின்றி செலுத்த கடைசி நாள் மற்றும் நேரம் | 15.07.2022 அன்று மாலை 4.30 மணி வரை |
| 7. | 75% ஏலபாக்கி அபராத தொகையுடன் (18%) ஏலபாக்கியை செலுத்துவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | 29.07.2022 அன்று மாலை 4.30 மணி வரை |
| 8. | ஒப்பந்தப்புள்ளி படிவம் இவ்வலுவலகம் மூலமாக கீழ்க்கண்ட தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். | 27.05.2022 தேதியிலிருந்து |

9. டெண்டர் படிவத்துடன் டெண்டர்தாரர் எந்த வகையான ஊர்திக்கு டெண்டர் அளிக்க விரும்புகிறாரோ அந்த வகை ஊர்திகளுக்கான விவரங்கள் மட்டுமே அளிக்கப்படும். டெண்டர் படிவத்தின் விலை கீழ்வருமாறு:

| வ. எண் | ஊர்திகளின் வகை | படிவத்தின் விலை ரூ. | வரி ரூ. | தபால் மூலம் அனுப்ப கூடுதலாக ரூ. |
|---|---|---|---|---|
| 1. | LMV | 100/- | 28/- | 50/- |

10. ஒவ்வொரு ஊர்திக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனி படிவத்தில் அந்தந்த ஊர்திக்கான பிணைமுறித் தொகைக்கு குறையாத அளவில் வங்கியில் 27.05.2022 தேதிக்குப் பின்னர் தேதியிட்டு எடுக்கப்பட்ட, வங்கி வரைவோலையை இணைத்து முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து அனுப்ப வேண்டும். மேலும், ஏலத்திற்கான கேட்பு வரைவோலை (Demand Draft) ஆணையர், கருவூல கணக்குத் துறை, சென்னை-35 என்ற முகவரிக்கு எடுக்கப்பட்டு சென்னையில் மாற்றத்தக்கதாக இருத்தல் வேண்டும். உறையின் மீது

ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படும் ஊர்தியின் பதிவு எண், தயாரிப்பு, ஏல அட்டவணை வரிசை எண் ஆகியவற்றை பெரிய எழுத்துக்களில் எழுதி தெரிவிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர், கருவூல கணக்கு ஆணையரகம், மூன்றாவது தளம், பேராசிரியர் க.அன்பழகன் மாளிகை, 571, அண்ணா சாலை, நந்தனம், சென்னை.35 என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நாளுக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். அதற்குப்பின் காலதாமதமாகப் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் எந்த காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது. மேலும், உறையின் மீது மேற்படி விவரங்களை எழுதி தெரிவிக்கப்படாத உறைகள் திறக்கப்பட மாட்டாது. ஏலத்தில் சேர்த்துக்கொள்ளப்படவும் மாட்டாது.

11. ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டிய பிணைமுறித் தொகையின் விவரம்
1. (Light Motor Vehicles / இலகுரக நான்கு சக்கர ஊர்திகள்) - ரூ. 2000/-

11(அ) பிணைமுறித் தொகைக்கான வங்கி வரைவோலையின் பின்புறத்தில் ஏலதாரரின் பெயர், ஏல அட்டவணை வரிசை எண் மற்றும் வாகன எண் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் (ஏலதாரர் கையொப்பமிடக் கூடாது).

11(ஆ) பிணைமுறித் தொகைக்கான வங்கி வரைவோலைகளை மற்ற ஏலதாரருக்கு செலுத்த வேண்டிய 25%, 75% மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி போன்றவற்றிற்காக மாற்றப்படுதல் ஏற்கப்படமாட்டாது.

12. விற்பனைக்காக பட்டியலிட்டு (கூடிய மட்டும்) தெரிவிக்கப்படும் ஊர்திகளில் பதிவு எண்./ தயாரிப்பு/ மாடல் / இருக்குமிடம் - அந்தந்த ஊர்தியின் ஏல அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊர்திக்கு, ஏல ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் எந்தவொரு வேலை நாட்களிலும் ஊர்திகளை சென்று பார்வையிடலாம். மேலும்,ஊர்திகள் உள்ளது உள்ளபடியேயான நிலையில் (As is where is basis)விற்பனை செய்யப்படுகின்றன.

13. ஊர்திகளுக்கு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கொண்ட உறைகள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஏலதாரர்கள் முன்னிலையில், சென்னை-35, நந்தனம், தமிழ்நாடு கருவூல கணக்குத் துறை ஆணையரகத்தில் குறிப்பிட்ட தேதியில் காலை 10.30 மணி அளவில் திறக்கப்படும்.

14. அதிகபட்ச விலைப்புள்ளிகள் அளித்துள்ள டெண்டர்தாரர்களின் பெயர் தெரிவிக்கப்பட்டவுடன் அவரால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொகையில் 25% தொகையை, வங்கி வரைவோலையாக ஏல நிபந்தனை வ.எண் 5ல் குறிப்பிட்டுள்ள தேதிக்குள் மாலை 4.30 மணிக்குள் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், ஏலதாரர் செலுத்தியுள்ள EMD க்கான வங்கி வரைவு பறிமுதல் (Forefeit) செய்யப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்படும்.

15. எந்தவொரு ஊர்திக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படாவிட்டால் ஏலதாரர் செலுத்தியுள்ள பிணை முறித்தொகை ஒப்பந்தப்புள்ளி உறையில் அவர் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலில் திருப்பி அனுப்பி வைக்கப்படும். முகவரி இல்லாத உறையில் உள்ள பிணைமுறித் தொகை பறிமுதல் செய்யப்பட்டு இத்துறையின் தலைப்பில் செலுத்தப்படும்.

16. ஏலதாரர் எந்தவொரு ஊர்திக்கும் 25% ஏலத்தொகை செலுத்திய நாளில் இருந்து நிபந்தனை 6ல் கூறப்பட்ட தேதிக்குள் பாக்கி 75% ஏலத்தொகையையும், ஏலத்தொகையின் மீதான சரக்கு மற்றும் சேவை வரியையும் செலுத்தி ஊர்தி விடுவிப்பு உத்தரவினை பெற்றுக் கொள்ள வேண்டும். பிணை முறித்தொகை, 25% ஏலத்தொகை, 75% ஏல பாக்கித் தொகை, சரக்கு மற்றும் சேவை வரி சேர்த்து மொத்தம் நான்கு (4) வரைவோலைகளுக்கு மேல் பத்து

(10) வரை மட்டும் ஏலதாரர் செலுத்தும் நிலையில் Processing Fees ஆக ரூ. 50/- (ரூபாய் ஐம்பது மட்டும்) ரொக்கமாக H பிரிவில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு ரசீதின் நகலுடன் வங்கி வரைவோலைகளை சேர்த்து ஆணையரக H பிரிவில் ஒப்படைக்கப்பட வேண்டும் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி தனி வரைவோலையாக செலுத்தப்பட வேண்டும். மேலும், 10 வங்கி வரைவோலைகளுக்கு மேல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

17. ஏலதாரர் நிபந்தனை 7ல் தெரிவித்துள்ள காலக்கெடுவிற்குள் 75% தொகை சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் 18% அபராத தொகையுடன் செலுத்த தவறினால் அன்னார் ஏற்கனவே செலுத்திய 25% ஏலத்தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசு கணக்கில் சேர்க்கப்படும். அதன் பின்னர் ஏலதாரரின் எந்தவொரு கோரிக்கையும் ஏற்கப்பட மாட்டாது.

18. பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் (ACT) நடைபெறும் நாளன்று இந்த அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் காலை 10.15 மணி வரை பெறப்படும்.

19. ஏலத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபரிடமிருந்தும் நுழைவு கட்டணமாக ரூ.20/- (ரூபாய் இருபது மட்டும்) வசூலிக்கப்படும். இந்த தொகை திருப்பித் தரப்படாத தொகையாகும். மேலும், பொது ஏலத்தில் உள்ள ஊர்திகளை டெண்டர் படிவம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படவிருக்கும் ஏலதாரர் அந்தந்த ஊர்திகளுக்கேற்ப குறிப்பிட்டுள்ள பிணைத் தொகைக்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். வெற்றிபெறும் ஏலதாரர் பொது ஏலத்தில் ஒவ்வொரு ஊர்திக்கும் அவர் ஏலத்தில் கோரிய ஏலத்தொகையில் 25% தொகையை பிணைத் தொகையுடன் ஏலம் நடந்த அன்று அல்லது அடுத்த வேலை நாளுக்குள் இந்த அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

20. EMD தொகைக்கான வங்கி வரைவுகள் அறிவிக்கப்பட்டுள்ள ஏல தேதிக்கு முன்னர் ஒரு மாதத்திற்குள் எடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ACT க்கு உண்டான வரைவோலைகள் இந்த அலுவலகத்தில் ACT நடைபெற உள்ள தேதிக்கு 30 நாட்களுக்குள் எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

21. மொத்த ஏலத்தொகையும் வரியுடன் தனித்தனியாக பாக்கி இல்லாமல் செலுத்திய ஏலதாரருக்கு செலுத்திய வங்கி வரைவோலைகள் வங்கியில் செலுத்தப்பட்ட Remittance ஆணையரக H பிரிவிலிருந்து பெறப்பட்ட பின்பு 30 நாட்களுக்குள் நேரடியாக ஏலதாரரின் மாதிரி கையொப்பம் வாகன விடுவிப்பு ஆணை படிவத்தில் பெறப்பட்டு வழங்கப்படும்.

22. வெற்றி பெறும் ஏலதாரர் ஒப்பந்தப் படிவத்தில் இடப்பட்ட கையொப்பமும், வாகன விடுவிப்பு உத்தரவில் இடப்படும் கையொப்பமும் வித்தியாசப்படுமாயின் வாகன விடுவிப்பு உத்தரவு வழங்கப்பட மாட்டாது.

23. ஏலதாரர் மீது சந்தேகம் ஏற்படுமாயின், தங்களை இன்னார் என்று ஏலதாரர் ஆதார் அட்டை / உணவுப் பொருள் வழங்கும் அட்டை / ஓட்டுநர் உரிமம் / பான் கார்டு / வாக்காளர் அடையாள அட்டை / தபால் துறையினரால் வழங்கப்படும் அடையாள அட்டை மூலம் நிரூபிக்க வேண்டும்.

24. <u>ஊர்தி விடுவிப்பு ஆணை ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயருக்கு வழங்கப்படும்</u>. அன்னாரின் அங்கீகாரம் பெற்றவரின் பெயருக்கு விடுவிப்பு ஆணை வழங்கவேண்டுமெனில் அங்கீகாரம் பெற்றவரின் அடையாளத்தை காட்டும் வகையில் கீழ்க்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றில் ஓர் அரசு பதிவு பெற்ற அதிகாரியின் சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே அங்கீகாரம் அளித்தவரின் பெயரில் வாகன விடுவிப்பு அளிக்கப்படும். அடையாளத்தை காட்டுகின்ற ஆவணங்கள் கீழ்வருவன:

1. ஆதார் அட்டை
2. பாஸ்போர்ட்
3. ஓட்டுநர் உரிமம்
4. வாக்காளர் அடையாள அட்டை
5. குடிமைப்பொருள் வழங்கல் அட்டை மற்றும்
6. அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள்

25. இந்த அலுவலகத்திலிருந்து ஊர்தி விடுவிப்பு பெற்றுக் கொண்ட 45 தினங்களுக்குள் ஏலதாரர் ஊர்தி இருக்குமிடம் சென்று ஊர்தியை பெற்றுக் கொள்ள வேண்டும். 45 நாட்கள் கடந்தும் ஊர்தியை எடுத்துக் கொள்ளாவிட்டால் ஏற்படும் கால தாமதத்திற்கு கொட்டகை வாடகை நாளொன்றிற்கு ரூ.100/- வீதம் வசூலிக்கப்படும். மேலும், 60 நாட்கள் (இரண்டு மாத காலம்) கொட்டகை வாடகை தொகை செலுத்தி பெற்றுக்கொள்ள காலஅவகாசம் வழங்கப்படுகிறது. அந்த காலத்திற்குள் ஏலதாரர் வாகனத்தை விடுவித்துக் கொள்ளவில்லையென்றால் அவ்வாகனங்களை ஏலதாரர் எடுத்துக்கொள்ள விரும்பாதவராக உள்ளார் என கருதப்பட்டு மறு ஏலத்தில் சேர்த்து விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஏலதாரர் செலுத்திய தொகை அரசு கணக்கில் சேர்க்கப்படும் என்பதையும் ஏலதாரர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் வாகனத்தை டெலிவரி எடுத்துக்கொள்ளாத ஏலதாரரால் தெரிவிக்கப்படும் எந்த கோரிக்கையும் ஏற்கப்படமாட்டாது.

26. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடும் தொகையானது வரி சேராத நிகர தொகையாகும்.

27. சரக்கு மற்றும் சேவை வரியானது நடப்பில் அவ்வப்போது அமுலில் இருக்கும் விகிதத்தின்படி வசூலிக்கப்படும்.

28. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் மட்டுமே கையொப்பமிட்டு இருக்க வேண்டும். வேறொருவர் கையொப்பம் இட்டு இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். EMD தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படும்.

29. ஏலதாரர்கள் ஒரு வாகனத்திற்கு இருவர் ஒரே விலைப்புள்ளி (Tie rate) கோரும் பட்சத்தில், கீழக்கண்டவாறு ஏலக்குழுவின் முன்னிலையில் விலை நிர்ணயம் செய்யப்படும்.
1. Light Motor Vehicle / இலகுரக வாகனம் - ரூ.500/- குறைந்த பட்ச கூடுதலாக விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

மேற்சொன்ன முறையில் ஒரே விலைப்புள்ளி (Tie rate) யில் இரு ஏலதாரர்களும் விலைப்புள்ளி அளிக்கும் பட்சத்தில் டெண்டர் கமிட்டி முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

30. இந்த ஏல நிபந்தனையுடன் ஊர்திகளின் விவரமும் அவைகள் இருக்கும் இடமும், இந்த அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படியே தயாரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஊர்திக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒவ்வொரு ஏலதாரரும் ஊர்தியை நேரில் பார்த்து மற்றும் ஆவணங்கள், பதிவுச்சான்று போன்றவற்றை சரிபார்த்த பின்னர், ஒப்பந்தப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. ஊர்தியை பார்வையிடாமலும் ஆவணங்களை சரிபார்க்காமலும் அட்டவணையில் உள்ள விவரங்களை மட்டும் கொண்டு விலைப்புள்ளி கொடுத்து ஏற்படும் தவறுகளுக்கு இத்துறை எந்த விதத்திலும் பொறுப்பேற்காது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆகையால், ஏலதாரர் ஊர்தியை பார்வையிட்டு கொடுக்கப்பட்ட விவரங்களை உறுதி செய்து மன நிறைவு கொண்டால் மட்டுமே விலைப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.

31. மேலும், ஏலதாரர் வாகனங்களை பார்வையிடும்போது வாகனம் எந்த நிலையில் உள்ளது என்பதற்கான ஆதாரம் அளித்தால் மட்டுமே வாகனம் விடுவிக்கும்போது வாகனங்களில் ஏற்படும் குறைபாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட வாகன உரிமை அலுவலருக்கு தெரிவிக்கப்படும்.

32. ஏலதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஊர்திகள் குறித்து இந்த அலுவலகத்தில் விசாரித்து தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறும் மற்றும் ஊர்திகள் பற்றிய விவரங்களுடன் ஊர்திகள் உள்ளபடியான நிலையில் உள்ளதா என ஒவ்வொரு ஏலதாரரும் சரிபார்த்துக் கையொப்பமிட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், ஊர்திகள் விற்பனை செய்யப்பட்டு இத்துறையின் மூலம் விடுவிப்பு ஆணை வழங்கப்பட்ட ஊர்தியின் ஆவணங்கள் (எடுத்துக்காட்டாக) பதிவுச்சான்று முதலியவற்றிற்கு இத்துறை எந்தவிதத்திலும் பொறுப்பேற்காது என்றும் ஏலதாரருக்கு தெரிவிக்கப் படுகிறது. ஊர்திகள் உள்ளது உள்ளபடியான நிலையிலேயே ஏலத்திற்கு விடப்படுகிறது.

33. மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் உறுதியாக்கம் செய்து விடுவிப்பு உத்தரவுகள் வழங்கப்பட்ட பின் விற்பனை செய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் அதன் தொடர்பான ஏதேனும் குறைகள் இருந்தால் அது தொடர்பான வழக்கு பதிவு செய்வதாக இருப்பின் அவ்வழக்கானது உயர்நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் இதன் மூலம் டெண்டர்தாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

34. எந்தவொரு ஊர்திக்கும் பெறப்படும் விலைப்புள்ளியை ஏற்கவோ அல்லது எந்த காரணமும் காட்டாமல் நிராகரிக்கவோ இத்துறை ஆணையர் முழு அதிகாரம் பெற்றவர் என அறிவிக்கப்படுகிறது.

தி ந வெங்கடேஷ்
கருவூல கணக்கு ஆணையர்

//ஆணைப்படி/அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்